**சர்வதேச தொடர்பு மற்றும் தந்திரோபாய கற்கைகளிற்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் - 2012**

---

சர்வதேச தொடர்பு மற்றும் தந்திரோபாய கற்கைகளிற்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 32 ஆம் இலக்க இலங்கை தந்திரோபாய கற்கைகளிற்கான நிறுவக அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 2000 இன் 45 இலக்க தந்திரோபாய கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகள் மற்றும் கருத்துரைகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை சர்வதேச தொடர்புகள் மற்றும் தந்திரோபாய கற்கைகளிற்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 32 ஆம் இலக்க தந்திரோபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டம் 10 உ (I), ஆம் பிரிவு | அதிகாரச்சட்டம் அமுலாக்கப்பட்ட திகதியில் இருந்து அமுலாக்கும் வகையில் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவகம் (பீஐடீஈஐ) கதிர்காமர் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட வேண்டியதுடன, பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய கற்கைப் பாடநெறிகளை நடாத்துவதற்காக பொறுப்பு வாய்ந்த பிரிவாக அந் நிறுவகம் செயற்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரை இந்த நிறுவகங்கள் இரண்டும் வேறாக செயற்படும் இரு நிறுவகங்களாக நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | நிறுவகத்தால் 2011 செப்தெம்பர் முதல் 2012 மே மாதம் வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறித்த தினத்தில் பணம் அனுப்பிவைக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 11,934 தொகை மிகை அறவீடாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சி கள் சுற்றறிக்கை 9.3.1 ஆம் பந்தி | நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

#### 3.1.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,367,328 மிகையாக காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 563,642 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,930,970 தொகையான முன்னேற்றம் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 8.9 மில்லியன் தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 12.9 மில்லியன் தொகையினால் அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்குக்க காரணமாகியிருந்தது.

## 4. கணக்களிப்புப்பொறுப்பு

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் 2 ஆண்டுகள் 10 மாதங்கள் தாமதத்துடன் 2016 சனவரி 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராமையால் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை எய்தும் அளவீடு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பணிப்பாளருக்கு எனது அறிக்கையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாடு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதவியணி முகாமைத்துவம்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு